பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 17 புதன்கிழமை 01.07.2020 கதிர் 106

## வவுனியாவில் ரயில் மோதி ஒருவர் சாவு

வவுனியா, ஜூலை 01

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் இன்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் செட்டிகுளம்

2

# கருணாவுக்கு மன்னிப்பு வழங்கிவிட்டோம் அரசியல் கைதிகளை மன்னிப்பதில் சிக்கல்



### தமிழ் ஊடகப் பிரதானிகள் மத்தியில் மஹிந்த

கொழும்பு, ஜூலை 02

கருணாவுக்குப் பொதுமன்னிப்பளிக்கப்பட்டு விட்டது. அவருக்குப் பிரத்தியேகமாக மன்னிப்பளிக்காவிட்டாலும், முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பு அவருக்கும் வழங்கப் பட்டுள்ளது. ஆனால் அந்தப் பொதுமன்னிப்பின் கீழ் சிறைச்சாலைகளில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதில் சிக்கலுள்ளது எனத் தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இன்று தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2

## சிக்கியது 'ஐஸ்'!

### 2 கோடி ரூபா பெறுமதியானது

யாழ்ப்பானம், ஜூலை 01

உயிர்க் கொல்லி போதைப் பொருள்களில் ஒன்றான ஐஸ்ஸை கடத்த முற்பட்ட 50 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து 2 கோடி ரூபா மதிக்கத்தக்க 2 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளும் 25 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன.

வல்வெட்டித்துறையிலிருந்து வான் ஒன்றில் கடத்திச் சென்றபோது பருத்தித்துறையில் வைத்து சந்தேக நபர் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

2

## போர்க் குற்றவாளிகளுக்கு இலங்கையில் உயர் பதவி!

### ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இணை அனுசரணை நாடுகள் அதிருப்தி

**ஜெனிவா, ஜூலை 01**

**இலங்கையில் 2009 ஆம் ஆண்டு நடந்த மோதலின் போது பாரதூரமான உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம்சாட்டப்பட்ட அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டமை குறித்து இலங்கை தொடர்பான இணை அனுசரணை நாடுகள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளன.**

2

## இலங்கை சிங்கள பௌத்த நாடல்ல

### மீண்டும் முழங்கும் மங்கள

கொழும்பு, ஜூலை 01

சிங்கள பௌத்த நாடு என்று நாட்டை ஒருபோதும் அடையாளப் படுத்த முடியாதென முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

2

## லண்டனில் பெற்ற மகளை கொன்றார் தமிழ்ப் பெண்!

### உயிரை மாய்க்க முயன்ற அவர் வைத்தியசாலையில்

லண்டன், ஜூலை 01

லண்டனில் இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது நான்கு வயது மகளைக் கொலை செய்துள்ளதுடன், தானும் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லண்டனில் மிச்சம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிருக்குப் போராடும் நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குப் பொலிஸாரும், வைத்தியர்களும் விரைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மன அழுத்தம் காரணமாகவே அவர் இவ்வாறு தனது மகளைக் கொலை செய்துள்ளார்

2

## பிரதமராகி 24 மணி நேரத்தில் எரிபொருள் விலை குறையும்!

### வவுனியாவில் வைத்து சஜித் உறுதி



வவுனியா, ஜூலை 01

நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் ஆட்சி அமைத்து பிரதமராகி 24 மணி நேரத்தில் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படுவதோடு 2025 இல் நாட்டில் வீடில்லா பிரச்சினை முற்றாக ஒழிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் பிரதம வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் இன்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2

## அபிவிருத்தித் திட்டங்களில் வடக்கு - தெற்கு பேதமில்லை

### பிரதமர் மஹிந்த கூறுகின்றார்

நாட்டு அபிவிருத்தி மற்றும் மக்கள் வாழ்க்கையை மேம்படுத்தும் திட்டங்களின்போது வடக்கு மற்றும் தெற்கு என்ற பேதம் இல்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இன்று காலை அலரி மாளிகையில் தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 1977ஆம் ஆண்டின் பின்னர், 2005 - 2010ஆம் ஆண்டுகளில் தங்கள் அரசு ஆட்சியில் இருந்தபோது பெரியளவில் அபிவிருத்தித் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டதென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார். அந்த மாகாணங்களில் மக்களின் வாழ்க்கை சிறந்தத் நிலைக்கு கொண்டு வரும் திட்டங்களுடன் தங்கள் அரசு செயற்பட்டதாக அவர் கூறினார்.

2

Semba STORE

மளிகைப் பொருள்கள் உங்கள் வீடு நோக்கி...!

யாழ் நகரில்







Semba STORE இன் விநியோக சேவை

077 411 4422

Payment method - cash on delivery

## இலங்கை சிங்கள .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையானது சிங்கள, பௌத்த நாடு அல்லவென நான் கூறிய கருத்து பலருக்குப் பெரும் பிரச்சினையாக அமைந்தது.

ஆனால் உண்மையாக நாட்டை ஆகமத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்த முடியாது.

இது இலங்கை நாடு. நான் சொல்லும் விடயங்களை மூளை உள்ளவர்கள் சிந்தித்து பார்க்கவேண்டும்.

அதாவது பௌத்த மதம் நான் கூறிய கருத்துக்களினால்தான் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதா என்பதை நன்கு யோசித்து பாருங்கள்.

மேலும் பௌத்த மதம் தொடர்பாக நான் சொல்வதைவிட மஹாநாயக்கர்களே இவ்விடயம் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியன சிறந்த முறையில் செயற்பாடுகளை முன்னெடுக்க தவறியுள்ளன.

நான் தற்போது இல்லை. ஆகவே சிறந்த முறையில் அவர்கள் செயற்பாடுகளை முன்னெடுக்கட்டும் - என்றார்.

## சிக்கியது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்தேக நபர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர் தற்போது யாழ்ப்பாணம் சிறப்பு அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் சிறப்பு அதிரடிப்படையினர் குறிப்பிட்டனர்.

## கருணாவுக்கு மன்னிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருணா அம்மானுக்குப் பொதுமன்னிப்பளிக்கப்பட்டுவிட்டது. பிரத்தியேகமாக அவருக்கு மன்னிப்பளிக்கப்படவில்லை. ஆனால், முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்புக்குள் அவரும் உள்ளடங்குகிறார்.

அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளமுடியாதவை - என்றார்.

இதன்போது, அரசியல் கைதிகளை ஏன் இந்தப் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்க முடியாது எனக் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், தடுத்து வைக்கப்பட்டுள்ள பலருக்கு பாரதூரமான குற்றச்சாட்டுக்களின் கீழ் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அவர்களின் விவகாரம் சிக்கலானது - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அரசியல்கைதிகளின்பட்டியல்கையளிக்கப்பட்டமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, அரசியல்கைதிகளை விடுவிக்கும் எந்த நடடிக்கையும் தேர்தல் காலத்தில் இடம்பெறவில்லை - என்றார்.

## வவுனியாவில் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துடரிகுளம் வீதி பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையை கடக்க முயன்ற போது ஓட்டோவுடன் மோதியுள்ளது.

இதன்போது முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த ஓட்டோச் சாரதியான 55 வயதுடைய சஹிது எனும் மௌலவி சம்பவ இடத்திலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் 500 மீற்றர் தூரத்துக்கு ஒட்டோ இழுத்துச்செல்லப்பட்டுள்ளதுடன், சாரதியின் உடல் 150 மீற்றருக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டுள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர் .

இதன்போது விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனையில் இரு வீதிகள் ஒரு வழிப் பாதைகளாகின

கல்முனை நகரசுற்றுவட்டத்தில் இருந்து பிரதான வீதிக்குச் செல்லும் இரு வீதிகள் ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளன என்று கல்முனை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி நிஹால் சிறிவர்த்தன அறிவித்தார்.

இந்த வீதிகளில் காணப்படும் போக்குவரத்து நெருசலைக் குறைப்பதற்காகவும் மக்களின் அன்றாட போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எனவே சமிக்ஞை அறிவிப்புப் பலகைகளை அவதானித்து வீதிகளில் பயணம் செய்யுமாறும் அவர் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டத்தின் கல்முனைத் தலைமையகப் பொலிஸ் நிலையத்தை ஊடறுத்துச் செல்லும் வீதி மற்றும் முதன்மை வீதி இணையும் பகுதி என்பன ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டன.



தொடர்ந்து கல்முனை வாடி வீட்டு வீதியில் இருந்து செல்லும் வீதி கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியில் சந்திக்கும் பகுதி ஒருவழி பாதையாக மாற்றப்பட்டது.

இருந்தபோதிலும் கல்முனை நகரப் பகுதிக்கு மக்களின் அதிகரித்த வருகை காரணமாக மேலும் இரு வீதிகள் ஒரு வழிப்பாதைகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக கல்முனை தலைமையக போக்குவரத்து பொலிஸார் குறிப்பிட்டனர்.

கல்முனை பொலிஸ் நிலையம் முன்பாக பொதுச் சந்தைக்கு செல்லும் பாதையூடாக அப்பாதையின் இடது பக்கம் மட்டக்களப்பு பாதை - பாண்டிருப்பு மருதமுனை பெரிய நீலாவணை திரும்பும் வீதி ஒரு வழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது.

ஒருவழி பாதையாக மாற்றப்பட்டுள்ள மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் புதிய நடைமுறையை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதற்காக மட்டக்களப்பு போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## பிரதமராகி 24 மணி நேரத்தில் எரிபொருள் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் - மதங்களுக்கிடையில் ஓர் ஒற்றுமையை வலியுறுத்துவதற்காகவும் நடை முறைப்படுத்துவதற்காகவும் என்னை அர்ப்பணித்து செயற்படுவேன்.

பொதுவாக எல்லா மதத்திலும் ஒரு சிலர் பிழையான பாதையில் செல்வதை நாங்கள் பார்க்கின்றோம். அதேபோல் அதிகளவான மதங்களில் நல்லவர்களே உள்ளனர். ஒருசிலரே இனவாத சிந்தனை கொண்டவர்களாக உள்ளனர். அடிப்படைவாத சிந்தனை கொண்டவர்களாகவும் பயங்கரவாதச் சிந்தனை கொண்டவர்களாவும் இருக்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் பல மோசமான சம்பவங்கள் இடம்பெற்றன. அவற்றை எல்லாம் வைத்து தமிழ் மக்களை குற்றவாளிகளாகப் பார்த்தமை மிகவும் மோசமான செயலாகும். ஒரு சிலரின் தவறுக்காக ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தை தவறாகச் சொல்ல முடியாது. அவ்வாறு செயற்படுவது தவறானது. அவ்வாறுதான் இந்த நாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மிகவும் மோசமான சம்பவம். அதை யார் செய்திருந்தாலும் அனுமதிக்க முடியாது. தண்டிக்கப்படவேண்டும். ஆனால் ஒரு சிலர் செய்த அந்தத் தவறை ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீது திணிக்க முடியாது. அவ்வாறு திணித்தால் இது தவறானதாகும். பௌத்த மதத்திலும் அவ்வாறான இனவாதச் சிந்தனை கொண்டவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அடிப்படைவாதச் சிந்தனை கொண்டவர்கள்.

எனது தந்தை ரணசிங்க பிரேமதாஸ இனங்களுக்கிடையில் புரிந்துணர்வோடு நடந்துகொள்ளுங்கள் என்பதைச் சொல்லித்தந்துள்ளார். இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் ஒற்றுமையாக வாழப் பழகுங்கள். இவ்வாறு இருந்தாலேயே நாட்டை கட்டியெழுப்ப முடியும். எனவே இந்தச் சிறிய நாட்டில் நாம் அனைவரும் ஒருதாய் பிள்ளைகளாக வாழப்பழகிக்கொள்ள வேண்டும் எனவும் அவர் சொல்லியிருக்கின்றார். எனவே நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்வது ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் இனங்களுக்கிடையில் பிரிந்துவிடாமலும் பிளவுபட்டுவிடாமலும் வாழவேண்டும். அதுவே ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையாகவும் கோட்பாடாகவும் உள்ளது.

இந்த அழகான தேசத்தை அழிப்பதற்காக பிரித்தாளுவதற்காக - தங்கள் அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக - ஆட்சியில் நீண்டகாலம் நிலைத்திருப்பதற்காக - சதிகாரர்கள் சதி செய்துகொண்டிருக்கின்றனர். இவ்வாறான சதிகாரர்களின் வலையில் நாங்கள் வீழ்ந்து விடாமல் மிக நிதானமாக இந்தத் தேசத்தின் எதிர்காலத்திற்காக, அபிவிருத்திக்காக, அர்ப்பணித்துச் செயற்படுபவர்களாக உங்களை நீங்கள் உருவாக்கி கொள்ளவேண்டும்.

ஆகவே ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நீங்கள் அளிக்கும் வாக்குகளினால் நாங்கள் நல்லாட்சி ஒன்றை அமைத்து 24 மணிநேரத்தில் மண்ணெண்ணெய், பெற்றோல், டீசலின் விலையைக் குறைத்து அதனூடாக மக்களுக்கு வரப்பிரசாதத்தை வழங்குவேன் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

அத்துடன் வீடுகள் இல்லாத பிரச்சினைகளுக்காக கடந்த காலத்தில் நாங்கள் வீடுகளை அமைத்துக் கொடுத்திருந்தோம். அந்தவகையில் எதிர்வரும் காலங்களில் ஒட்டுமொத்த மக்களும் எமக்கான ஆதரவை தந்து நான் பிரதமராக வருகின்றபோது 2025 ஆம் ஆண்டுக்கள் வீடில்லாத அனைவரது பிரச்சினையையும் தீர்த்து வைப்பேன் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார்.

## போர்க்குற்றவாளிகளுக்கு இலங்கையில் ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலின் 44 அமர்வில் கனடா, ஜேர்மனி, மசெடோனியா, மொன்டிநீக்ரோ, பிரிட்டன் ஆகிய நாடுகள் உள்ளடங்கிய குழு இலங்கை தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வகித்தவை இந்த நாடுகள்தாம்.

மனித உரிமைகளுக்கான பிரிட்டனின் சர்வதேசத் தூதுவர் ரீட்டா பிரென்ஞ் அந்த நாடுகள் சார்பில் இந்த அறிக்கையை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் இலக்குகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதில் உறுதியுடன் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச மாதம் முதல் இலங்கை கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமையுடன், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது குறைந்தளவுக்கு நோயாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தியுள்ளது. இதேவேளை, மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளமை போன்று கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக வழமைக்கு மாறான நடவடிக்கைகளை மனித உரிமைகளைப் பறிப்பதற்காக பயன்படுத்தக்கூடாது.

சிறுபான்மைக் குழுக்கள் இலக்கு வைக்கப்பட்டுப் புறக்கணிக்கப்படுவது, சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை, மோதலின்போது பாரதூரமான உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டமை, பொதுநிர்வாகம் மற்றும் பொதுமுயற்சிகள் பரந்துபட்ட அளவில் இராணுவமயப்படுத்தப்பட்டமை தொடர்பான இலங்கை மனித உரிமை அமைப்புகளின் கவலைகளைத் தாங்களும் பகிர்ந்து கொள்வதாக ரீட்டா பிரென்ஞ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் ஜனநாயகச் சூழல் வெளிப்படையானதாகவும் பொறுப்புக்கூறுவதாகவும் காணப்படுவதை உறுதி செய்யுமாறும் அவர் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கைது செய்யப்படுதல் மற்றும் தடுத்து வைத்தலின்போது உரிய நடைமுறைகளைப் பின்பற்றுமாறும், அவை சர்வதேச மரபுகள் மற்றும் உலகளாவிய உரிமைகளுடன் இணங்கிப்போவதை உறுதி செய்யுமாறும் அவர் இலங்கை அரசிடம் கேட்டுள்ளார்.

## அபிவிருத்தித் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தங்கள் ஆட்சியின்போது மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டங்களைத் தவிர, கடந்த நல்லாட்சி அரசு வடக்கு - கிழக்கு மக்களுக்காக எந்தவொரு மேம்பாட்டுத் திட்டங்களையும் செயற்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை பிரதமர் முன்வைத்தார்.

வடக்கு மக்களுக்காக முன் நிற்பதாகக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்குப் பதிலாக அரசியல் இலாபம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் மாத்திரமே செயற்பட்டதாக மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

அந்த மக்கள் முகம் கொடுக்கும் பிரதான பிரச்சினைகளான குடிதண்ணீர்ச் சிக்கலுக்குத் தீர்வு வழங்குவதற்காக தங்கள் அரசு முதலிடம் வழங்குவதாகத் தெரிவித்த பிரதமர், தற்போது வரையிலும் அதற்கான திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வடக்கு மக்களின் உண்மையான பிரச்சினைகள் தொடர்பில் அரசுக்கு தெரியப்படுத்துவது ஊடகவியலாளர்களின் பொறுப்பாகும் என்றும் பிரதமர் மஹிந்த தெரிவித்தார்.

## லண்டனில் பெற்ற ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், கொலைக்கான உரிய காரணம் இதுவரை வெளியாகவில்லை.

அவசர சிகிச்சை ஹெலி மூலம் தாயும், மகளும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மகள் உயிரிழந்துள்ளார். தாய் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

4 வயது நிரம்பிய சாயகி என்னும் சிறுமியே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜெனீவா முன்னறிவிப்பு

**இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 44 ஆவது அமர்வில் கடும் அதிருப்தி தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.**

**ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 44 ஆவது அமர்வு ஜெனீவாவில் பல தரப்புகளின் பிரசன்னத்துடன் முழு மூச்சாக நடைபெற வேண்டிய வேளை இது. உலகளாவிய ரீதியில் தாக்கியிருக்கும் கொரோனாத் தொற்றுப் பேரிடர் காரணமாகப் பெரும்பாலும் காணொலி மூலம், திரை அமர்வுகளில் இது இம்முறை நடைபெறுகின்றது. பல நாடுகளின் பிரதிநிதிகளும் தத்தமது நாடுகளில் இருந்தவாறே அமர்வுகளில் பங்கு கொள்கின்றனர்.**

**இலங்கை விவகாரத்தைப் பொறுத்த வரையில் இந்த அமர்வு உடனடியாக முக்கியமானதாக அமையவில்லை.**

**இலங்கை தொடர்பாக, இலங்கையும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் இறுதி ஆய்வு அடுத்த மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் கவுன் ஸிலின் 46 ஆவது அமர்வில்தான் முக்கியத்துவம் பெறுகின்றது. அப்போதுதான் இலங்கை விவகாரம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகள் தீர்மானகாரமான முடிவு ஒன்றை எடுக்க வேண்டிருக்கும். இப்போதல்ல.**

**ஆனால், ஜெனீவாவில் இலங்கை தொடர்பாக சர்வதேச சமூகத்தின் அணுகுமுறை எத்தகையதானதாக இருக்கும் என்பதற்கு இப்போது ஜெனீவாவில் வெளியாகியுள்ள அறிக்கை ஒரு முன்னுதாரணம்தான்.**

**கடைசியாக இலங்கை தொடர்பான விவகாரத்தை - தீர்மானத்தை - ஜெனீவா கவுன்ஸிலில் இணை அனுசரணைப் பணி வகித்து முன்மொழிந்தவை கனடா, ஜேர்மனி, மசெடோனியா, மொன்டிநீக்ரோ, பிரிட்டன் போன்றவை. இந்தப் பணிகளில் ஆரம்பம் தொடக்கம் முன்னின்று செயற்பட்ட அமெரிக்கா இப்போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இல்லை.**

**அங்கு, டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் அதிகாரத்துக்கு வந்தமையை அடுத்து முன்னெடுக்கப்பட்ட இராஜதந்திர தீர்மானத்தின்படி அந்நாடு கவுன்ஸிலில் இருந்து வெளியேறி விட்டது.**

**எனினும், அமெரிக்கா சம்பந்தப்பட்டிருந்த நாடுகள் விவகாரத்தை அதே நிலைப்பாட்டில் கையாள்வதில் ஏனைய இணை அனுசரணை நாடுகள் தீர்மானமாக இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.**

**அந்த அடிப்படையில்தான், இலங்கை விவகாரத்தையும் அந்நாடுகள் கையாள்கின்றன.**

**இலங்கை தொடர்பான கடைசித் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சமயம், மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க அரசு ஆட்சியில் இருந்தது. அப்போதைய இராஜதந்திர நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, இலங்கை தொடர்பில் கவுன்ஸிலில் முன்னெடுக்கப்படவிருந்த தீர்மானத்தில் இலங்கை தன்னையும் இணை அனுசரணையாளராகச் சேர்த்துக் கொண்டு சமாளித்தது.**

**ஆனால் புதிதாகப் பதவி ஏற்ற கோட்டாபய அரசு ஜெனீவா விடயத்தைக் கையாளும் போக்கை முழுமையாகத் தலைகீழாக மாற்றிக் கொண்டது.**

**கடந்த மார்ச்சில் நடைபெற்ற கவுன்ஸிலின் ஜெனீவா அமர்வில், மேற்படி தானும் சேர்ந்து, பங்களித்து, இணை அனுசரணைப் பணி வகித்து முன்னர் நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து தான் வெளியேறுவதாக இலங்கை அறிவித்தது.**

**அனுசரணைப் பணியிலிருந்து இலங்கை விலகிக் கொண்டாலும் கூட, நிறைவேற்றப்பட்ட தீர்மானம் செல்லுபடியாகும், அந்தத் தீர் மானத்தின்படி தான் உறுதியளித்த விடயங்களை இலங்கை நிறைவேற்றியே தீர வேண்டும், அதற்கு இலங்கை கடப்பாடுடையது என்பதே கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளினதும், நிர்வாகக் கட்டமைப்பினதும் நிலைப்பாடாகும்.**

**அதையே இப்போது ஏனைய இணை அனுசரணை நாடுகள் ஒன்றுபட்டு விடுத்திருக்கும் அறிக்கை பிரதிபலித்து நிற்கின்றது.**

**ஏற்கனவே இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மான விடயங்களில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் பொறுப்புக் கூறல், தவறிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்தல், இழப்பீடு வழங்கல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் போன்ற விவகாரங்களில் இலங்கை நிறைவு செய்துள்ள பணிகள் குறித்து இறுதி மதிப்பீடு செய்து, கவுன்ஸில் தீர்மானங்களை எடுப்பது அடுத்த மார்ச்சிலாகும். அதற்கு இன்னும் ஒன்பது மாதங்கள் உள்ளன.**

**எனினும், இலங்கை விடயத்தில் கவுன்ஸில் நாடுகள் எத்தகைய அணுகுமுறைப் போக்கைக் கடைப்பிடிக்கும் - ஒன்றுபட்டு நிற்கும் - என்பதற்கான முன் அறிவித்தலை தற்போதைய அமர்வை ஒட்டிய தமது அறிக்கையில் அவை கோடி காட்டியுள்ளன.**

**யுத்தத்தின் போது பாரதூரமான உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்ட படை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டமை தொடர்பில் இணை அனுசரணை நாடுகள் தெரிவித்துள்ள கடும் அதிருப்தி அடுத்த மார்ச்சில் நடைபெறப்போகும் அமர்வில் அவற்றின் நிலைப்பாட்டுக்கான கட்டியம்தான்.**

# மட்டக்களப்பில் கடும் வரட்சி: 58 ஆயிரத்து 915 பேர் பாதிப்பு

## பவுசர்களில் குடிதண்ணீர் விநியோகம்

மட்டக்களப்பு, ஜூலை 01

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சியால் 58 ஆயிரத்து 915 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியுடனான காலநிலை காரணமாக நிலத்தடி நீர் குறைவடைந்தும், ஆறுகள், குளங்கள், நீர்நிலைகளில் நீர் வற்றியும் உள்ளதால் குடிதண்ணீரைப் பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். எட்டு பிரதேச செயலாளர் பிரிவிகளிலுள்ள 17 ஆயிரத்து 936 குடும்பங்களைச் சேர்ந்தோரே இவ்வாறு வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அனர்த்த முகாமைத்துவப் பிரிவால் பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவின் வட்டவான், காயங்கேணி, கட்டுமுறிவு, மதுரங்குளம், பலாச்சேனை, மாங்கேணி மத்தி, பனிச்சங்கேணி, கிரிமிச்சை, புனாணை கிழக்கு, மாங்கேணி தெற்கு உட்பட கதிரவெளி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்து 308 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 553 பேரும் கோறளைப் பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் காகித நகர் பகுதியில் 236 குடும்பங்களைச் சேர்ந்த 831 பேரும், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவின் தியாவட்டவான் பகுதிகளில் 363 குடும்பங்களைச் சேர்ந்த 1264 பேரும், கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் முறுத்தானை, பூலாக்காடு, குடும்பிமலை, வாகனேரி, புனாணை மேற்கு உட்பட கிரான் மேற்கு பகுதிகளில் ஆயிரத்து 751 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 810 பேரும் குடிதண்ணீரின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் பன்சேனை, இலுப்படிச்சேனை, கொத்தியாபுல, குறிஞ்சாமுனை, நெடியமடு, பாவக்கொடிச்சேனை, உன்னிச்சை, காந்தி நகர், ஆயித்தியமலை, காஞ்சிரங்குடா, ஆயித்தியமலை வடக்கு உட்பட வவுணதீவு பகுதிகளில் 2 ஆயிரத்து 694 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 783 பேரும், போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் பாலயடிவட்டை, பட்டபுரம், விவேகானந்தபுரம், காந்திபுரம், திக்கோடை, தும்பங்கேணி, வீரச்சேனை, மாவட்குடா, நெல்லிக்காடு, புன்னகுளம், ரணமடு, சின்னவத்தை, மாலயர்கட்டு, வம்மியடியூத்து, களுமுந்தன்வெளி, கண்ணபுரம், ஆனைகட்டியவெளி, விளாந்தோட்டம், வெல்லாவெளி, மண்டூர் தெற்கு, காக்காச்சிவட்டை, பலாச்சோலை, தும்பங்கேணி, சங்கர்புரம் ஆகிய பகுதிகளில் 6 ஆயிரத்து ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 19 ஆயிரத்து 971 பேரும், ஏறாவூர்பற்று பிரதேசச் செயலாளர் பிரிவின் மங்களகம, கரடியனாறு, பெரிய புல்லுமலை, உறுகாமம், கோப்பாவெளி, கொடுவாமடு, கித்துள், பன்குடாவெளி, வேப்பவட்டுவான், மரப்பாலம் உட்பட ஈரலக்குளம் பகுதிகளில் 2 ஆயிரத்து 240 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 190 பேரும் குடிதண்ணீர் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பிரதேச செயலகங்கள், உளூராட்சி அதிகார சபைகளின் உதவியுடன் 33 பவுசர்கள் மூலமாக நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கான நிதி ஒதுக்கீடுகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவால் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் இவ்வரட்சி நிலை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடுப்பகுதி வரை நீடிக்கலாம் என்று வளிமண்டல திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# பாடசாலைச் சுவரையும் விட்டுவைக்காத கட்சிகள்



யாழ்ப்பாணம் , ஜூலை 1

தேர்தல் நெருங்கும் நிலையில் விதிமுறைகளை மீறி சுவரொட்டிகளை ஒட்டுவதும் கட்சிச் சின்னங்களை சுவர்களில் வரைவதும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

அண்மையில் நல்லூர்ப் பகுதியில் இருந்த பாரதியார் சிலையில் இதுபோன்று இம்மைமறுமையின்றி தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அது சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து பிரதமரே உத்தரவிட்டு அவற்றை அகற்றச் செய்திருந்தார்.

இவ்வாறு பாரதியார் சிலையில் சுவரொட்டி ஒட்டப்பட்டதை விமர்சித்த கட்சிகளில் சில பாடசாலை என்றும் பாராது சுவர்களைத் தமது சுவரொட்டிகளாலும் சின்னங்களாலும் அசிங்கமாக்கியுள்ளன.

தாவடியில் உள்ள பாடசாலை மதில் இவ்வாறு அசிங்கப்படுத்தப்பட்டிருப்பதை இந்தப் படத்தில் காணலாம்.

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவிலிற்கு ஒப்பாக இருக்கிறது கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் செயல்.

விளம்பரங்களால் பாடசாலைச் சுவரை அசிங்கப்படுத்திய அரசியல் கட்சிகளே தமது ஆதரவாளர்கள் மூலம் அவற்றை அகற்றி சீர்செய்ய வேண்டும் என தாவடிப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மங்கையர்கரசி பாடசாலையில் அமையும்

# வாக்களிப்பு நிலையத்தை இடம்மாற்றக் கோரிக்கை

ந.லோகதயாளன்

ஓகஸ்ட் 5ஆம் திகதி நடக்கவுள்ள பொதுத் தேர்தலில் நல்லூர்த் தொகுதியின் மங்கையற்கரசி பாடசாலையில் அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையத்தினை இடமாற்றம் செய்ய வேண்டும் என தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு இடையில் தேர்தல் வாக்களிப்பு வருவதால் மங்கையர்கரசி வாக்களிப்பு நிலையத்தை மாற்றும்படி கேட்கப் பட்டுள்ளது.

நல்லூர் உற்சவம் ஜூலை 25ஆம் திகதி ஆரம்பிக்கின்றது. உற்சவ நாள்களில் ஆலயத்தைச் சூழவுள்ள நான்கு பக்க வீதிகளும் தடை செய்யப்படுவது வழமை.

வாக்களிப்புத் தினத்திலும் இந்த வீதித் தடைகளால் இடைஞ்சல்கள் ஏற்படக்கூடும் என்று கருதப்படுகின்றது.

மக்கள் சுமுகமாக வாக்களிப்பதற்கு இந்த வீதித் தடை இடைஞ்சலாக இருக்குமோ என்கிற அச்சம் காரணமாகவே வாக்களிப்பு நிலையத்தை மாற்றுவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை தேர்தல் ஆணைக்குழு ஆராய்வதோடு மாற்று ஏற்பாடுகள் தொடர்பிலும் பரிசீலிக்கப்பட்டுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ‘உன்னால ஒண்டும் புடுங்க முடியாதுடா’ சாத்தான்குளம் பொலிஸார் அடாவடி

## விசாரணை அதிகாரிக்கு மிரட்டல் விசாரணைக்கு ஒத்துழைக்காது சிலர் ஓட்டம்

சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்தில் ஜெயராஜ் - பென்னிக்ஸ் ஆகிய தந்தை, மகன் அடுத்தடுத்து இறந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் கோவில்பட்டி மாஜிஸ்திரேட் பாரதிதாசன், தன்னுடைய விசாரணை குறித்த அறிக்கையை மதுரை உயர்நீதிமன்றப் பதிவாளருக்கு அனுப்பினார்.

அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:-

மதுரை உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் நீதிமன்ற ஊழியர்களுடன் சாத்தான்குளம் பொலிஸ் நிலையம் சென்றேன். பொறுப்பு அதிகாரிகளான தூத்துக்குடி மாவட்ட மேலதிகப் பொலிஸ் அதிகாரி குமார், துணை அதிகாரி பிரதாபன் ஆகிய இருவரும் அங்குள்ள அறையில் இருந்தனர். அப்போது நான் உள்ளே நுழைந்தேன். அந்த சமயம் அவர்கள் இருவரும் எந்த வரவேற்பு அறிகுறியும் இல்லாமல் ஒருமுறை கூட முறையான வணக்கம் செலுத்தாமல் அலட்சிய மனப்பான்மையுடனும், பொறுப்பற்ற தன்மையுடனும் இருந்தனர்.

தமது உடல்பலத்தைக் காட்டுவதான உடல் அசைவுகளைச் செய்து கொண்டு இருந்தனர். மிரட்டும் தொனியிலான பார்வையுடனும், உடல் அசைவுகளுடனும் குமார் இருந்தார். ஏனைய பொலிஸாரை ஒருமையில் அதட்டிக் குமார் பேசினார். பொலிஸ் நிலையத்தின் கண்காணிப்பு கமராவில் இருந்த தகவல்சேமிப்பான் ஆய்வு செய்யப்பட்டது. அதில் போதுமான ’சேமிக்கும் இடம்’ இருந்த போதும் கமராவில் பதிவாகும் காட்சிகள் நாள்தோறும் தானாகவே அழிந்து போகுமாறு அங்கிருந்த கணினியில் தயார் செய்யப்பட்டு இருந்தது.

பொலிஸ் அதிகாரி ரேவதியிடம் வாக்கு மூலம் பெறும் பணி தொடங்கப்பட்டது. அவர் சம்பவ இடத்து சாட்சியாக இருந்த காரணத்தினால் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் மிகவும் கவனத்துடன் பதிவு செய்யப்பட்டது. அவர் மிகுந்த பயத்துடனும், தான் சொல்வதை வெளியில் சொல்ல வேண்டாம் என்றும், தான் சாட்சியம் அளிப்பதை வெளியில் உள்ளவர்கள் கேட்டுக்கொண்டு இருப்பார்கள் என்றும் பயந்தார். அதன்பேரில் நீதிமன்ற ஊழியர்கள் பாதுகாப்பிற்காக வெளியில் நிறுத்தப்பட்டு இருந்தார்கள். அப்போதும் கூட பொலிஸார் நிலையத்தின் வலது பக்கம் உள்ள வேப்ப மரத்தின் கீழ் அவ்வப்போது கூட்டமாக சேர்ந்து நீதிமன்ற ஊழியர்களின் அறிவுறுத்தல்களை பின்பற்றாமலும், அவர்களைக் கிண்டல் செய்தனர். ரேவதி, சாட்சியம் அளித்தால் தனக்கு மிரட்டல் வரும் என்று, மிகுந்த பயத்துடன் காணப்பட்டார் குமார். அவரது வாக்கு மூலத்தில், ’கைதிகள் இருவரையும் விடிய விடிய லத்தியால் அடித்ததாகவும், அதில் லத்தி மற்றும் டேபிள் ஆகிய இடங்களில் ரத்தக்கறை படிந்துள்ளதாகவும், அதனை அவர்கள் அழிக்க நேரிடும் என்றும் அவற்றை உடனடியாகக் கைப்பற்ற வேண்டும்’ என்றும் கூறினார்.

லத்திகளை கைப்பற்றும் பொருட்டு, அங்கிருந்த பொலிஸ்காரர்களை லத்திகளை கொடுக்கும்படி கூறியும், அவர்கள் காதில் ஏதும் விழாதது போல் இருந்தார்கள். பிறகு கட்டாயப்படுத்தியதன் பேரில் அனைவரும் அவர்களது லத்தியை ஒப்படைத்து விட்டார்கள். அதில், மகாராஜன் என்னை பார்த்து ’உன்னால ஒன்னும் புடுங்க முடியாதுடா’ என்று எனக்குப் பின்னால் என் காதில் விழும்படிபேசி, அங்கு அசாதாரண நிலையை உருவாக்கினார்.

மேலும் முதலில் அவரது லத்தி சொந்த ஊரில் உள்ளது என்றார். பிறகு அவரது பொலிஸ் குடியிருப்பில் உள்ளது என்றும், அனைத்துபக்கங்களிலும்நடந்துகொண்டு போதிய ஒத்துழைப்பு தரமறுத்ததாலும், வரேன், இரு என்று ஒருமையில் சொல்லியதுடன், ஒரு கட்டத்தில் தனக்கு லத்தியே இல்லை என்று கூறி நின்றுகொண்டார். மற்றொரு பொலிஸாரிடம் லத்தியைக் கேட்ட போது அவர் எகிறி குதித்து தப்பி ஓடிவிட்டார் - என்றுள்ளது.

## திருமணமான இரண்டு நாள்களில் மணமகன் சாவு திருமணத்துக்குச் சென்றவர்களுக்குக் கொரோனா

இந்தியாவின் பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவின் பாலிகஞ்ச் பகுதியைச் சேர்ந்த 30 வயதான ஆண் ஒருவர் திருமணம் முடித்த இரண்டாவது நாளில் உயிரிழந்தர். அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

அவர்களது நெருங்கிய உறவினர்களுக்குக் கொரோனா அறிகுறி தென்பட்டதால் அவர்களுக்குப் பரிசோதனை நடத்தப்பட்டது. கொரோனா பாதிப்பு உறுதியானது. பின்னர் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்குச் சோதனையை மேற்கொள்ளப்பட்டது. அதில் 100க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பீகாரில் முதன்முறையாகக் கொரோனா தொற்று அதிகம் பேருக்கு பரவிய முதல் நிகழ்வு இதுவாகும். மணமகனின் குடும்பத்தினர் சுகாதார அதிகாரிகளுக்கு உரிய தகவல் அளிக்காமல் தகனம் செய்துவிட்டதால், மணமகன் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டாரா என்பதைக் கண்டறிய முடியவில்லை. இந்த விடயம் குறித்துப் பொலிஸார் தெரிவிக்கையில், மென்பொருள் பொறியியளாலரான தீபாலி என்பவர் திருமணத்திற்காக தனது சொந்த கிராமத்திற்கு வந்துள்ளார். அப்போது, அவருக்கு கொரோனா அறிகுறி இருந்துள்ளது. குடும்பத்தினர் திருமண ஏற்பாடுகளை செய்துள்ளனர். திருமணம் முடிந்த 2 நாள்களுக்குப் பிறகு, மணமக னின் உடல்நிலை மோசமடையவே, பாட்னா எய்ம்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரி ழந்துள்ளார்.

அவர் உயிரிழந்த விவகாரத்தை அறிந்த மாவட்ட அதிகாரிகள், திருமண நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் கொரோனா பரிசோதனை செய்துள்ளனர். அதில் 100க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

மணப்பெண்ணுக்கு கொரோனா இல்லையென முடிவுகள் வந்துள்ளன. கொரோனா தொற்று அறிகுறிகள் இருந்தும், தங்களது மகனுக்கு திருமணம் செய்து வைத்ததோடு, சமூக இடைவெளியைப் பின்பற்றாமல், 50க்கும் மேற்பட்டோர் திருமண நிகழ்வில் பங்கேற்க குடும்பத்தினர் சட்ட மீறலில் ஈடுபட்டுள்ளனர் என்றனர்.

## பொலிஸார் மீது கொலை வழக்கு மனுக் கையளித்தார் கனிமொழி



சாத்தான்குளத்தில் சிறையில் தந்தை, மகன் அடுத்தடுத்து உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவர் மீதும் கொலை வழக்குப் பதிவு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க. உறுப்பினர் கனிமொழி, தமிழகப் பொலிஸ் தலைவர் ஜே. கே. திரிபாதிக்கு மனு அளித்தார்.

அந்த மனுவில் அவர் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தந்தையையும் மகனையும் கண்மூடித் தனமான அடித்து உதைத்துக் கொன்றிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. சட்டத்தின் ஆட்சி தமிழ் நாட்டில் செத்து விட்டதா என்ற கேள்வியை இந்த மரணங் கள் எழுப்புகின்றன. ஊரடங்கு நேரத்தில் கடை நடத்தினார் என்பதற்காக உயிரைப் பறிக்கும் தாக்குதலில் பொலிஸார் ஈடுபட்டிருப்பது கண்டனத் திற்குரியது.

கொலைக் குற்றத்தில் ஈடுபட்ட அதிகாரிகளை ஆயுதப்படைக்கு மாற்றி விட்டால் நீதி வழங்கியதாக அர்த்தம் ஆகாது. அவர்கள் மீது கடும் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது.



## தாஜ் ஹோட்டலுக்கு மிரட்டல்

பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள பங்குச் சந்தையில் நேற்று முன்தினம் இனம் தெரியாத ஆயுததாரிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பொதுமக்கள், பொலிஸார் என 7 பேர் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்திய 4 ஆயுததாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலின் பின்னணியில் இந்தியா இருப்பதாகப் பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து இந்தியாவின் மும்பையில் பொலிஸார் உசார்படுத்தப்பட்டனர்.

மும்பையிலுள்ள தாஜ் விடுதி, சி.எஸ்.எம்.டி. ரயில் நிலையம், நரிமன் ஹவுஸ், காமா மருத்துவமனை உள்ளிட்ட 6 இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. நேற்று அதிகாலை 12.30 மணிக்கு தாஜ் விடுதிக்கு வந்த தொலைபேசி அழைப்பு ஒன்றில் ஒருவர் கராச்சியில் இருந்து பேசுவதாகவும், தாஜ் விடுதி தாக்கப்படும் என்றும் மிரட்டியதாகத் தெரிவித்தே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

## எமது மருந்து கொரோனாவை குணப்படுத்தும் என்று கூறவில்லை

### பதஞ்சலி நிறுவனம் பல்டி

கொரோனாவைக் குணமாக்கும் மருந்து என்று தெரிவித்து கொரோனில் என்ற பெயரில் கடந்த 22ஆம் திகதி இந்தியாவின் பதஞ்சலி - ராம்தேவ் அறிமுகப்படுத்திய மருந்தை விளம்பரம் செய்யக் கூடாது என இந்திய ஆயுஷ் அமைச்சகம் தடுத்தது.

அத்தோடு அந்த மருந்து குறித்து பல கேள்விகளையும் எழுப்பியது. இந்த நிலையில் உத்தராகண்ட் மாநில ஆயுஷ் அமைச்சகம் அனுப்பிய கேள்விக்குப் பதிலளித்துள்ள பதஞ்சலி நிறுவனத்தின் தலைமை அதிகாரி ஆச்சார்ய பால்கிருஷ்ணா, எமது மருந்தை எடுத்துக் கொண்ட கொரோனா நோயாளிகளுக்குக் குணம் கிடைத்தது என்று மட்டுமே கூறப்பட்டது. அது கொரோனாவைக் குணப்படுத்தும் என்று கூறவில்லை என்று பதிலளித்தார்.




## சிப்பாய்கள் மீது தாக்குதல்

ஜம்மு - காஷ்மீரின் சோபூர் பகுதியில் இன்று காலை கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்தியச் சிப்பாய்கள் மீது தாக்குதல் இனம் தெரியாதவர்களால் நடத்தப்பட்டது.

இதில் 3 சிப்பாய்கள் காயம் அடைந்தனர். காயமடைந்தவர்களில் இருவரின் நிலமை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் மொதுமகன் ஒருவரும் காயமடைந்தார். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# கோபத்தில் கொப்பளிக்கிறார் கிம்!

வடகொரியாவின் தலைவர் கிம் ஜோங் உன்னின் மனைவி குறித்துத் தென்கொரியர்கள் ஆபாசமான சித்திரிப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன் கடும் கோபத்தில் உள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. வடகொரியாவின் முதல் பெண்மணியான ரி சோல் ஜூவைத் தென்கொரியா ஆபாசமாகச் சித்திரித்துள்ளது என்று வட கொரியாவின் ரஷ்ய உயர்மட்டத் தூதர் தெரிவித்தார்.

வட கொரியாவுக்கான ரஷ்யத் தூதரான அலெக்ஸாண்டர் மாட் செகோரா இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது:-



ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பலூன்களை ஏவுகின்ற தென்கொரியாவுக்கு வட கொரிய அரசு அதே பாணியில் பதிலளித்து வருகின்றது. ஆனால், அங்குள்ளவர்கள் வடகொரியாவின் முதல் பெண்மணியை ஆபாசமாகச் சித்திரித்து விளம்பரம் செய்கின்றனர்.

பலூன்கள் மூலம் ஏவப்படும் விளம்பரங்களில் வட கொரியத் தலைவரின் மனைவிக்கு எதிரான மோசமான மற்றும் அவமதிக்கும் பிரச்சாரங்கள் அடங்கி உள்ளன. இது வட கொரியத் தலைவருக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

தென் கொரிய செய்தி நிறுவனம் ஒன்றின் கூற்றுப்படி, மே மாதம் 31ஆம் திகதியன்று தென்கொரியாவிலிருந்து அனுப்பப்பட்ட பலூன்களில் வடகொரிய தலைவர் மனைவியின் ஆபாசப் படங்கள் இருந்தன என்றுள்ளது.

இந்த நிலையிலேயே வடகொரியாத் தலைவர் கிம் ஜோங் உன் கடும் கோபத்தில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# அமேசன் நிறுவனத்தில் சூடு!




அமெரிக்காவில் அமேசன் நிறுவனத்தில் இனம்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

அதில் 3 பேர் மீது குண்டுகள் பாய்ந்தன. ஒருவர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார். அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் ஜாக்சன் வில்லே நகரில் இயங்கிவந்த அமேசன் இணைய நிறுவனத்திலேயே இந்தச் சம்பவம் நடந்தது.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர்கள் அவர்கள் வந்த காரிலேயே தப்பிச் சென்றனர். குண்டு பாய்ந்த இருவரும் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் என்ன என்று உடனடி யாகத் தெரியவில்லை. சூடு நடத்திவிட்டுத் தப்பி ஓடியவர்களைத் தேடி வருகிறோம் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவமனையில் தீ எகிப்தில் 7 பேர் சாவு



எகிப்தில் தனியார் மருத்துவமனையில் கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெற்று வரும் பகுதியில் நிகழ்ந்த தீ விபத்தில் 7 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

எகிப்தின் 2ஆவது மிகப் பெரிய நகரமான அலெக்சாண்டிரியாவில் உள்ள தனியார் மருத்துவமனையிலேயே இந்தப் பரிதாபகரமான சம்பவம் நடந்தது.

அங்கு கொரோனா நோயாளிகள் ஏராளம்பேர் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று அதிகாலை இந்தத் தீ விபத்து ஏற்டபட்டது. உயிரிழந்தவர்கள் தவிர இந்தத் தீ விபத்தில் மேலும் 7 பேர் படுகாயம் அடைந்தனர்.





அமெரிக்காவில் இனவெறிக்கு எதிராகப் போராடுபவர்கள் மிஸ்சோரி மாநிலத்தில் உள்ள செயின் லூயிஸ் நகரத்தில் ஒரு வீட்டின் கதவை உடைத்தனர். அந்த இடத்தின் உரிமையாளர்களான மார்க் மற்றும் அவரது மனைவி பேட்ரிகா ஆகிய இருவரும் இணைந்து போராட்டக்காரர்களை நோக்கித் துப்பாக்கிளை நீட்டி மிரட்டினர்.

# ட்ரம் விரும்பினால் மாஸ்க் அணிவார்! வெள்ளை மாளிகை விளக்கம்



முகக்கவசம் அணிவது அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் தனிப்பட்ட விருப்பம், அவர் விரும்பினால் அதை அணியலாம் என்று வெள்ளை மாளிகை தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கெய்லீ இதுகுறித்துக் கூறும்போது, முகக்கவசம் அணிவது ட்ரம்ப்பின் தனிப்பட்ட விருப்பம். மக்கள் அவர்களது பாதுகாப்பிற்காக முகக்கவசம் அணிவதை ட்ரம்ப் ஆதரிக்கிறார்.

மேலும் அவர் முகக்கவசம் அணிவதில் எந்தப் பிரச்சினையும் தனக்கு இல்லை என்றும் என்னிடம் கூறினார் - என்றார். தேர்தல் பிரச்சாரங்களின்போது ட்ரம்ப் முகக் கவசம் அணியாதது குறித்து விமர்சனம் எழுந்தது குறிப்பிடத்தக்கது.

# சீனா விரைகிறது உலக சுகாதார குழு

கொரோனா வைரஸ் தோற்றம் பற்றி ஆராய்வதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் வல்லுநர் குழு ஒன்று சீனாவுக்குச் செல்லவிருக்கின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வுஹானில் உள்ள இறைச்சி சந்தையில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா வைரஸ் முதன் முதலாக வெளிப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், அது தொடர்பாக ஆராய்வதற்காகத் தமது குழு ஒன்று சீனாவுக்குச் செல்லவிருப்பதாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் டெட்ரோஸ் அதானோம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸ் தோற்றம் பற்றி ஆராய்ந்து அறிவதற்காக உலக சுகாதார நிறுவனம் தனது வல்லுநர் குழுவை அடுத்த வாரம் சீனாவுக்கு அனுப்புகிறது. இந்த வைரசின் தோற்றம் பற்றி அறிந்து கொள்வது மிக மிக முக்கியமானது. இந்த வைரஸ் எப்படி பரவத்தொடங்கியது என்பது உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் தெரிந்து கொண்டால்தான் அதற்கு எதிராகச் சிறப்பாகப் போராட முடியும். எதிர்காலத்துக்காக நாம் தயாராக முடியும் என்றார்.

# பட்டியலில் இருந்து அமெரிக்கா நீக்கம்



கொரோனா காரணமாக மூடப்பட்டிருந்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் எல்லைகள் திறக்கப்பட்டுள்ளன.

27 உறுப்பினர்களைக்கொண்ட ஐரோப்பிய ஒன்றிய ஆணையகம், அதன் எல்லைகளுக்கு அப்பால் 14 நாடுகளில் இருந்து சுற்றுலா, வர்த்தகப் பயணங்களை மேற்கொள்ள அனுமதி அளித்தது. இதன்படி அல்ஜீரியா, ஆஸ்திரேலியா, கனடா, ஜோர்ஜியா, ஜப்பான், மாண்டினீக்ரோ, மொராக்கோ, நியூசிலாந்து, ருவாண்டா, செர்பியா, தென் கொரியா, தாய்லாந்து, துனிசியா மற்றும் உருகுவே ஆகிய நாடுகளுக்குப் பயண அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதே நேரம் அமெரிக்கா, ரஷ்யா, பிரேசில் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் கொரோனாவால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று கூறி மேற்படி நாடுகள் பயணப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பு சுபீட்சமான வாழ்க்கை பாதை!

## வேட்பாளர் இம்ரான் மஹ்ரூப் எடுத்துரைப்பு



கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பு சுபீட்சமான முறையில் வாழ வேண்டும் என்பது. இதன் மூலம் மக்களின் வாழ்க்கை தரம் உயர வேண்டும். இதற்கான பயணத்தை நாம் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அதற்கான பலப்படுத்தலே எதிர்வரும் பொதுத்தேர்தல் ஆகும்.

–இவ்வாறு திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராகப் போட்டியிடும் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

எம்.ஐ. சவாகிர் தலைமையில் மூதூர் நொக்ஸ் கிராம மக்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அமையப்போகும் அரசில் சிறுபான்மையினராக உள்ள சமூகம் சார்பில் தெரிவுசெய்யப்பட வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை அதிகரிக்க வேண்டும்.

கிராமம் கிராமமாக மக்களின் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இப்பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமே ஒழிய ஒருபோதும் பழிவாங்கும் எண்ணமோ புறக்கணிப்போ மக்களுக்கு நடக்கக்கூடாது. எதை எப்படி செய்யலாம் என்ற தூய தூர நோக்கு எண்ணத்துடன் அரசியலில் செயற்பட வேண்டும். இதனையே மக்கள் எதிர்பார்க்கின்றனர் – என்றார்.

# நாட்டின் பல இடங்களில் மழைக்கான சாத்தியம்!

மேல், வடமேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணத்திலும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் சில இடங்களில் இன்று அல்லது நாளை மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். எனவே, மின்னல் தாக்கத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களை, வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# தேர்தல் குறித்து இதுவரை யாழில் 24 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 01

தேர்தல் தொடர்பில் இதுவரை 24 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கி.அமல்ராஜ் தெரிவித்தார்.

வேட்பாளர்களின் பதாகைகளை அகற்றும் நடவடிக்கைகள், பிரதேச செயலர் பிரிவு ரீதியில், பொலிஸாரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறினார்.

# பரப்புரைக்கு உதவப்போய் சிக்கலில் மாட்டிய அதிபர்

(ந.லோகதயாளன்)

பொதுத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தேர்தல் பரப்புரைக்கு உதவப் போய் வில்லங்கத்தில் மாட்டிக்கொண்டார் பாடசாலை அதிபர் ஒருவர்.

முன்னாள் முதல்வரின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் வரவேற்பு நிகழ்விற்கு பாடசாலை இன்னிசைக் கருவிகளை வழங்கிய அதிபரிடம் அமைச்சினால் விளக்கம் கோரப்படுகின்றது.

மல்லாகம் கொலமன்கால் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் தலைமையிலான கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடந்தது. இந்த நிகழ்வில் இன்னிசை அணிவகுப்பு மரியாதையுடன் வேட்பாளர்கள் மற்றும் கடசிப் பிரமுகர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இதற்காக அருகில் உள்ள பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தப்பட்டதோடு பாடசாலையின் இசைக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் முறையிடப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டின் மீது நடவடிக்கை எடுத்துள்ள கல்வி அமைச்சு, இன்னிசை கருவிகளை வழங்கிய பாடசாலையின் அதிபரை வலயத்தில் இணைத்துவிட்டு விசாரணைகளைத் தொடக்கி உள்ளது.

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 – 08 – 1969



மறைவு
30 – 06 – 2020

## செல்வி Dr. வினோதினி சண்முகலிங்கம்

(யாழ் போதனா வைத்தியசாலை, நிர்வாக இயக்குநர் நோர்தேன் இண்டஸ்ரீஸ், யாழ்ப்பாணம்.)

இல. 43 பிறவுண் வீதி, நீராவியடி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி Dr. வினோதினி சண்முகலிங்கம் 30.06.2020 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுருவில் தம்பியப்பா சண்முகலிங்கம், ராசலெட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும், சுபோதினி, சுபேந்திரன், Dr. நந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலாம்பிகையின் மைத்துனியும், சத்தியனின் பாசமிகு மாமியாரும், மாணிக்கவாசகன், காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சிவநாதன், உலகநாதன் ஆகியோரின் பாசமிகு பெறாமகளும், நாகேஸ்வரியின் மருமகளும், காலஞ்சென்ற Dr. ராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா, அருள்கந்த ராஜன், நவநீதராஜன் ஆகியோரின் அருமை மருமகளும், மகாலெட்சுமி, காலஞ்சென்ற ஆனந்தலெட்சுமி மற்றும் சந்திரமதி ஆகியோரின் ஆசை பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 02.07.2020 வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மாலை 4.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குற்றாலம்
43, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.







திருநெல்வேலிச் சந்தையில் இன்று காலை நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனின் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியினர் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டனர்.

# போதனா வைத்தியசாலைக்குள் உள்ள கடைகள் எதற்கும் பதிவுகளே இல்லை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 01

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் இயங்கும் வியாபார நிறுவனங்கள் எவையும் சட்ட ரீதியாக பதிவு செய்யப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளாகத்திற்குள் 10 வியாபார நிறுவனங்கள் இயங்குகின்றன. அவற்றில் ஓர் வெதுப்பகம், ஓர் சுப்பர் மாக்கட் (கடைத் தொகுதி இரண்டு உணவகங்களும் அடக்கம். 6 பழக் கடைகளும் வியாபாரத்தில் ஈடுபடுகின்றன.

இவ்வாறு வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் எந்தவொரு விற்பனை நிலையமும் மாநகர சபையின் பதிவுகளிற்கு உட்படுத்தப்படவில்லை. அதனைப் பதிவு செய்யுமாறு மாநகர சபை எழுத்தில் கடிதம் அனுப்பியபோதிலும் அவற்றைப் பதிவு செய்வதற்கு வைத்தியசாலைத் தரப்பில் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்று மாநகர சபைத் தரப்புக் குற்றஞ்சாட்டுகின்றது.

“வைத்தியசாலைக்குள் உள்ள விற்பனைக் கூடங்கள் அனைத்துமே நலன் புரிச் சங்கங்கள் ஊடாகவே இயங்குகின்றன. இவற்றினைப் பதிவு செய்யுமாறு மாநகர சபை அனுப்பிய கடித்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கும்படி அவற்றை நடத்துபவர்களுக்குப் பணித்துள்ளோம்.” என்று இது தொடர்பில் பதிலளித்தார் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி.

# கல்முனை விபத்தில் ஒருவர் காயம்





கனரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதி கொண்டதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பொலிஸ் எல்லைக்குட்பட்ட தாளவட்டுவான் சந்தியில் இன்று முற்பகல் இடம்பெற்றது.

மருதமுனை பகுதியில் இருந்து நற்பிட்டிமுனை பகுதியை நோக்கி வந்து கொண்டிருந்த கனரக வாகனமும் நற்பிட்டிமுனை பகுதியில் இருந்து கல்முனையை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இவ்விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் காயமடைந்தமையுடன் மோட்டார் சைக்கிளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கல்முனை போக்குவரத்து பொலிஸார் விபத்துத் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தவராசா செய்வது சரியா? சிவாஜி திடீர் முறைப்பாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 01

அரச அமைச்சு ஒன்றின் ஆலோசகராக இருக்கும் ஒருவர் அரசியல் கட்சி சார்ந்து கருத்துத் தெரிவித்து அரசியல் செய்வதைத் தேர்தல்கள் திணைக்களம் தடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசகராக, அமைச்சரவை அங்கீகாரம் பெற்று அரச ஊதியம் பெறுபவரான சின்னத்துரை தவராசாவுக்கு எதிராகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளரான எம்.கே.சிவாஜிலிங்கம் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

தவராசா பெறுவது கட்சிச் சம்பளம் அல்ல, மக்களின் வரிப்பணம். அந்த வகையில் அவரும் அரச ஊழியர் வரையறைக்குள் அடங்குபவராக இருக்கும் நிலையில் கட்சி சார் நடவடிக்கையிலும் பிற அரசியல் கட்சிகளை விமர்சிப்பதிலும் அவர் ஈடுபடக்கூடாது என்று தேர்தல்கள் திணைக்களம் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் என்று சிவாஜிலிங்கம் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தவராசா அரச சம்பளத்தையும் பெறுகின்றார் அதே நேரம் மற்றைய அரசியல் கட்சிகளிற்கு எதிராகவும் பேசுகின்றார். இவை அனைத்திற்கும் மேலாகத் தான் சார்ந்த அரசியல் கட்சிக்காகத் தேர்தல் ஆணைக்குழுவில் இடம்பெறும் கலந்துரையாடல்களிலும் கலந்துகொள்கின்றார்.

இவற்றின் அடிப்படையில் குறித்த விடயத்தை ஆராய்ந்து தேர்தல் ஆணைக்குழு முடிவினை வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தனது முறைப்பாட்டில் கோரிக்கை முன்வைத்துள்ளார்

# உலகக் கிண்ண ஆட்ட நிர்ணய விவகாரம்: உபுல் தரங்க 2 மணி நேரம் வாக்குமூலம்

கொழும்பு, ஜூலை 01

இலங்கை கிரிக்கெட் வீரர் உபுல் தரங்க இன்று விளையாட்டு தொடர்பான குற்றங்களை விசாரணை செய்யும் விசேட பொலிஸ் பிரிவில் முன்னிலையாகியுள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றது என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வெளியிட்ட கருத்து தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காகவே அவர் அங்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இன்று காலை 10 மணிக்கு குறித்த பிரிவில் முன்னிலையான அவர், சுமார் 02 மணித்தியாலத்துக்கு மேலாக வாக்குமூலம் வழங்கி விட்டு, அங்கிருந்து சென்றுள்ளார்.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பாக குறித்த காலப்பகுதியில் இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவின் தலைவராக இருந்த அரவிந்த டி சில்வா நேற்று குறித்த பிரிவில் சுமார் 06 மணி நேரம் வாக்குமூலம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 187 அடி உயரத்தில் போராட்டம்!

கொழும்புத் துறைமுக தொழிற்சங்கங்களைச் சேர்ந்த மூவர் 187 அடி உயரமான பாரம் தூக்கியில் ஏறிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தில் நிறுவுவதற்காக சீனாவிலிருந்து கொண்டு வந்த கென்டி பாரம் தூக்கியை விரைவாக குறித்த இடத்தில் நிறுவுமாறு வலியுறுத்தியே அவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த கோரிக்கைக்கு தீர்வைப் பெற்றுத்தரா விட்டால், உண்ணாவிரதப் போராட்டம் வரை அதனை முன்னெடுத்துச் செல்லவுள்ளனர் என்று கொழும்புத் துறைமுகத்தின் வர்த்தக தொழில்கள் மற்றும் சேவைகள் முற்போக்கு தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஷியாமல் சுமணரத்ன தெரிவித்தார்.

# சஜித், ரிஷாத் கலந்துகொண்ட வவுனியா கூட்டத்தில் கெடுபிடி





வவுனியா நகரசபை கலாச்சார மண்டபத்தில் சஜித் பிரேமதாஸா மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் கலந்து கொண்ட தேர்தல் பிரச்சார மக்கள் சந்திப்பில் விசேட அதிரடிப்படையினர் கடும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வவுனியா நகரசபை கலாச்சார மண்டபத்தில் குறித்த மக்கள் சந்திப்பு இன்று இடம்பெற்றது. அப்போதே அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

குறிப்பாக விசேட அதிரடிப்படையினர் வீதிகளில் வெடிபொருள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டமையுடன் மண்டபத்தில் வாயிலில் ஊடகவியலாளர்களில் ஒளிபட கமராக்கள், உபகரணங்கள் சோதனை செய்யப்பட்டன. அங்கு செல்லும் அனைவரும் உடல் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

மண்டப வளாகத்திற்குள் மோட்டார் சைக்கிள் உட்பட்ட வாகனங்களைக் கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டது. மண்டபத்திலிருந்து 100 மீற்றர் தூரத்திலேயே வாகனங்களை நிறுத்தி நடந்து வர அனுமதி வழங்கப்பட்டது. (உ-100)

# சுற்றிவளைப்புகளில் 46,617 பேர் சிக்கினர்!

## பல ஆயுதங்களும் மீட்பு

கடந்த ஜூன் மாதம் 06ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 46 ஆயிரத்து 617 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள், ஆயுதங்கள், வெடிபொருள்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 9 ஆயிரத்து 77 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த 17 ஆயிரத்து 275 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 ஆயிரத்து 140 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 4 ஆயிரத்து 413 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 415 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்களுடன் 89 பேரும், வெடிபொருட்களுடன் 10 பேரும், சட்டவிரோத மதுபானத்துடன் 9 ஆயிரத்து 198 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளில் ரி56 ரக துப்பாக்கி – 11, ரி 81 ரக துப்பாக்கி – 01, 12 துளை கொண்ட துப்பாக்கி – 26, கைத்துப்பாக்கி – 03, நாட்டுத் துப்பாக்கி – 26, ரிபிட்டர் வகை துப்பாக்கி – 46, வேறு ஆயுதங்கள் – 09, தோட்டாக்கள் – 578, வாள் – 03, கத்தி – 02 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளில் வெடிபொருள் 367 கிராம், டெட்டனேட்டர் 23, கைக்குண்டு 13 ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத மதுபானம் 4 இலட்சத்து ஆயிரத்து 876 லீற்றர் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# தன்மானமுள்ள – சுய கௌரவமுள்ள முஸ்லிம்கள் ராஜபக்ஷ அரசை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள்

## உறுதிபடக் கூறுகின்றார் ரவூப் ஹக்கீம்



**கொழும்பு, ஜூலை 01**

**முஸ்லிம்களைப் பொறுத்தவரை தன்மானமுள்ளவர்கள், சுய கௌரவமுள்ளவர்கள். ராஜபக்ஷ அரசு ஜனாஸாக்களை எரிப்பதற்கு முன்வந்திருப்பதன் காரணமாக இந்த ஆட்சியை அவர்கள் ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள் என்பது நிச்சயமாகும்.**

– இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான ரவூப் ஹக்கீம்.

கருணா அம்மான், கே.பி. போன்றவர்கள் தேர்தல் காலங்களில் பேசு பொருளாகின்றார்கள். கருணா அண்மையில் தெரிவித்த கூற்றால் படையினருக்கு ஏற்பட்ட அவமானத்துக்கு அரசு என்ன சொல்கின்றது. 2015ஆம் ஆண்டு தேர்தல் காலத்திலும் கே.பி. எனப்படும் பத்மநாதன் விவகாரம் சூடுபிடித்தது. பின்னர் என்ன நடந்தது? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கருணாவின் கூற்றால் ஆளும் தரப்பு சங்கடத்தில் இருக்கின்றது. தெற்கில் சிங்கள பௌத்த மக்கள் அதனால் குழம்பிப் போயிருக்கின்றார்கள். படையினர் குறிப்பாக இராணுவத்தினர் தாம் அவமானப்படுத்தப்பட்டனர் எனக் கருதுகின்றனர். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சிக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்தவர்களில் கருணாவும் ஒருவராக இருக்கின்றார். இப்போது அவரைத் தம்மிலிருந்து வேறுபடுத்திக் காட்டி தப்பித்துக்கொள்ள ஆட்சியாளர்கள் எத்தனித்து வருகின்றனர்.

முந்திய பொதுத் தேர்தல் காலத்தில் கே.பி. மலேசியாவில் கோலாலம்பூரில் வைத்து கைதுசெய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்பட்டு இரகசியப் பொலிஸாராலும், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினராலும் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் என்ன நடந்து விட்டது?

பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு கே.பியும் பொறுப்புக் கூறவேண்டும். அரசு அவரைக் கையேற்ற பின்னர் அவரிடமிருந்தது எனக் கூறப்பட்ட 06 கப்பல்களுக்கும் என்ன நடந்தது? அவர் தான் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு சர்வதேச மட்டத்தில் நிதி சேகரிப்பவராக இருந்தார் எனக் கூறினார். அவரிடமிருந்த பணத்துக்கு என்னவானது? சொத்துக்கள் எங்கே?

பின்னர் அவர் வடக்கில் சர்வ சாதாரணமாக நடமாடுகின்றார். இத்தகையவர்களெல்லாம் தேர்தல் காலங்களில் மட்டும் மக்கள்மயப்படுத்தப்படுகின்றனர். அவ்வளவுதான்.

இப்போதெல்லாம் தேசப்பற்றைப் பற்றிப் பெரிதாகக் கதைக்கின்றார்கள். ராஜபக்ஷ குடும்பத்தினரைப் போன்ற தேசப்பற்று இந்த நாட்டில் வேறு எவருக்கும் கிடையாது என்றவாறு கதையளக்கின்றனர். இதுவும் ஒரு தேர்தல் காலத்தின் உச்சத்தை எட்டுகின்றது.

ஒரு யுக மாற்றத்துக்கான தேவை ஏற்பட்டிருக்கின்றது. புதிய ஆட்சியை அமைப்பது எங்களது இலக்குகளில் ஒன்று. அடுத்தது ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சியைக் கைப்பற்றுவதாகும்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை தன்மானமுள்ளவர்கள், சுய கௌரவமுள்ளவர்கள். ராஜபக்ஷ அரசு ஜனாஸாக்களை எரிப்பதற்கு முன்வந்திருப்பதன் காரணமாக இந்த ஆட்சியை அவர்கள் ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள் என்பது நிச்சயமாகும் – என்றார்.

# கருணாவின் கருத்தைச் சாதாரணமானதாக அரசு எவ்வாறு எடுத்துக்கொள்ள முடியும்?

## லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி



இராணுவத்தினரைப் படுகொலை செய்துள்ளார் கருணா அம்மான் தெரிவித்துள்ள கருத்தை, சாதாரணமான விடயமாக அரசாங்கம் எவ்வாறு எடுத்துக்கொள்ள முடியுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, பொலிஸாரை படுகொலை செய்தமை மற்றும் அரந்தலாவ படுகொலை ஆகியவற்றை ஒரு போதும் சாதாரண விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது.

இத்தகைய சம்பவங்கள் நாட்டின் ஐக்கியத்தில் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவையாகும்.

கருணாவின் கருத்தை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எவ்வாறு சாதாரண விடயமாக எடுத்துக் கொண்டார்? – என கேள்வி எழுப்பியுள்ளார்.

# வன்னியில் 12 ஆயிரத்து 709 பேர் தபால் வாக்களிப்புக்கு விண்ணப்பம்

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை வெளியிடுதல் மற்றும் அவற்றை அஞ்சலுக்காக கையளித்தல் ஆகிய பணிகள் நேற்றும் இன்றும் நாளையும் தொடர்ந்து இடம்பெறவுள்ளன எனத் தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் வன்னி தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் உள்ள தபால் வாக்காளர்களின் பெயர்ப் பட்டியலை தயாரிக்கும் பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

அத்தோடு தபால் மூல வாக்கு சீட்டுகளை விநியோகிக்கும் பணி நேற்றிலிருந்து முன்னெடுக்கப்பட்டதாக வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் 5,132 தபால் வாக்காளர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளமையுடன், மன்னார் மாவட்டத்தில் 4,196 விண்ணப்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,381 விண்ணப்பங்களுமாக வன்னி தேர்தல் மாவட்டத்தில் 12,709 தபால் மூலமான வாக்குகளிற்கான விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு ஜூலை மாதம் 14,15,16 மற்றும் 17 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டாரில் இருந்து 272 பேர் இன்று நாடு திரும்பினர்

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கட்டார் நாட்டில் சிக்கித் தவித்த 272 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

அவர்கள் அனைவரும் விசேட விமானத்தின் மூலம் இலங்கைக்கு இன்று காலை அழைத்துவரப்பட்டுள்ளனர்.

நாடு திரும்பிய அவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஹோட்டல்களில் அவர்களைத் தங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸின் தாக்கம் குறையாதுள்ள நிலையில், வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொதுத்தேர்தல் முடிவடைந்தவுடனே அரசு எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்து

பொதுத்தேர்தல் நிறைவடைந்தவுடனேயே அமெரிக்காவுடனான மிலேனியம் சவால் ஒப்பந்தம் என்ற எம்.சி.சி உடன்படிக்கையில் அரசாங்கம் மிகவும் விரைவாக கைச்சாத்திடுமென காலியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் டில்வின் சில்வா மேலும் கூறியவை வருமாறு:–

எம்.சி.சி. உடன்படிக்கையை கிழித்தெறிவோம் என கூறி வந்தவர்கள். தற்போது அந்த உடன்படிக்கை தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

அதாவது கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சியில் இருந்தவர்கள், எம்.சி.சி உடன்படிக்கை நாட்டின் இறையான்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே அதனை தீயிட்டு கொழுத்த வேண்டுமென முழக்கம் இட்டனர்.

இந்நிலையில் தற்போது அவர்கள்தான், குறித்த எம்.சி.சி உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உயர்தரப் பரீட்சை எப்போது?

## இருநூறு குழுக்கள் மூலம் மாணவர் மத்தியில் ஆய்வு

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை நடத்துவது குறித்து இரு நூறு குழுக்கள் மூலம் மாணவர்கள் மத்தியில் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 6 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இந்த ஆய்வுகள் நடத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இதற்காக 200 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமையுடன், நேரடியாக மாணவர்களிடம் சென்று அவர்களிடம் இது குறித்து வினவி ஆராய்ந்தே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, எதிர்வரும் செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி பரீட்சை நடைபெறும் என எந்தவொரு மாணவரும் குழப்பமடையத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை கட்டமைப்பில் உள்ள மாணவர்களும் இரண்டாவது மற்றும் மூன்றாவது தடவை பரீட்சைக்கு தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் குறித்த பரீட்சையை நடத்தும் திகதியில் மாற்றம் ஏற்படுத்துமாறு கோரிக்கையை முன்வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.07.2020 இல் வெளியிடப்பெற்றது.